# மெட்ரோ ரயில் நிர்வாக கட்டிடத்திற்கு விருது

## அமெரிக்க நிறுவனம் வழங்கியது

சென்னை, ஜூலை 9: சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் ஆற்றல் மேலாண்மை ஆகியவற்றின் கீழ் அமைக்கப்பட்ட சென்னை மெட்ரோ ரயில் தலைமை அலுவலக கட்டிடத்திற்கு அமெரிக்க நிறுவனம் விருது வழங்கியுள்ளது.

இதுகுறித்து சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் வெளியிட்ட செய்தி குறிப்பு:

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு யூ.எஸ்.கிரீன் பில்டிங் கவுன்சில் என்ற அமெரிக்க நிறுவனம் சான்றிதழ் வழங்கி சிறப்பித்து வருகிறது. அதன்படி, சுகாதார மான, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கட்டப்பட்டது, குறைந்த செலவில் கட்டப்பட்ட கட்டிடங் களை கண்டறிந்து எல்.இ.இ.டி சான்றிதழை வழங்குகி றது. இந்நிலையில், குறைவான தண்ணீர் பயன்பாடு, ஆற்றல் மேலாண்மை, புதிய வடிவமைப்பு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளின் கீழ் சென்னை மெட்ரோ ரயில் தலைமை நிர்வாக கட்டிடத்திற்கு 110க்கு 70 மதிப் பெண்கள் வழங்கி கோல்டு ரேட்டிங் என்ற முதல்தர சான்றிதழை வங்கியுள்ளது.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.